# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C No. 56 /2020

2022– வருடம் பிப்ரவரி மாதம் 1–ம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணசாமி (அ.சா.–1) | தொழில் | : | |
| த/பெ., க/பெ. | : | | வயது | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுகா | : | | நாள் | : | 01.2.2023 |
| மாவட்டம் | : | | | | |

1–ம் எதிரி – ஐய்யப்பன் ஆஜர்
2–ம் எதிரி – குட்டி என்ற சுகுமார் ஆஜர்

முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

நான் தற்போது பழனி அடிவாரம் குரும்பர் மடத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் பேருந்து நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். குரும்பர் மடத்தை எனது மைத்துனர் முருகன் குத்தகை எடுத்திருப்பதால் நான் அங்கு குடும்பத்துடன் இருந்து வருகிறேன். தேதி சரியாக ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு நான் பணியில் இருந்த போது நாங்கள் குடியிருந்து வரும் குரும்பர் மடத்தில் கரண்ட் வராததால் EB க்கு தகவல் சொல்லி சரி செய்வதற்காக ஆட்கள் வந்த போது அதே மடத்தில் கடையில் வாடகைக்கு இருந்து வரும் 2–ம் எதிரி குட்டி என்ற சுகுமார் அருகில் இருந்த EB கம்பத்தில் தகரத்தை வைத்து கட்டியிருந்தார். நான் பணிக்கு சென்றிருந்ததால் வந்திருந்த EB ஊழியர்கள் எங்கள் வீட்டிற்கு சென்று என் மாமியாரிடம் மின் கம்பத்தில் கட்டியிருந்த தகரத்தை அகற்றி தருமாறு கேட்டுள்ளார்கள். என் மாமியார் அங்கு வந்து குட்டி என்ற சுகுமாரின் கடையில் இருந்த அவரது அம்மாவிடம் அந்த தகரத்தை அகற்றி தருமாறு கூறியுள்ளார். அதற்கு அவர் உங்கள் சௌகரியத்திற்கு அவ்வாறு செய்ய முடியாது என் மகன் வரட்டும் அவன் வந்த பிறகு பார்த்து விட்டு செய்துகொள்ளலாம் என்று சொல்லியுள்ளார். உடனே என் மாமியார் வீட்டிற்கு திரும்பி வந்து விட்டார். அவர் பின்னாலேயே எதிரிகள் இருவரும் என் மாமியார் வீட்டிற்கு வந்து அவரை தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார்கள். அதுபற்றி வீட்டிலிருந்த என் மனைவியிடம் என் மாமியார் கூறியுள்ளார். உடனே என் மனைவி 2–ம் எதிரியின் கடைக்குச் சென்று எதிரிகளிடம் ஏன் என் அம்மாவை தகாத வார்த்தைகளால்

பேசினீர்கள் என்று கேட்டுள்ளார். அதற்கு அவர்கள் அப்படி தான் பேசுவோம் என்று சொல்லி இருவரும் மற்றும் எதிரி சுகுமாரின் அண்ணன் மற்றும் தம்பி ஆகியோரும் சேர்ந்து என் மனைவியை அடித்துள்ளார்கள். அது பற்றி பணியில் இருந்த என்னிடம் என் மனைவி தகவல் கொடுத்தார். நான் பணி முடிந்து மதியம் சுமார் 1–3/4 மணிக்கு நாங்கள் குடியிருக்கும் மடத்திற்கு வந்தேன். வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது வழியில் எதிரிகள் இருவரும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் நான் வீட்டில் ஆண்கள் இல்லாத போது ஏன் பெண்களை அடித்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அப்படி தான் அடிப்போம் என்ன செய்வாய் உன்னையும் அடிப்போம் என்று சொல்லி 2–ம் எதிரி குட்டி என்ற சுகுமார் என் கையை பிடித்துக் கொண்டார். 1–ம் எதிரி ஐய்யப்பன் இருபக்கமும் கூர்மையான சுமார் 2 அடி நீளமுள்ள கத்தியால் எனது இடது பக்க இடுப்பிற்கு பின் பக்கம் குத்தினார். எனக்கு ரத்தம் வந்தது. என்னுடைய Duty Dress –ல் ரத்தம் ஆகிவிட்டது. நான் கீழே விழுந்து விட்டேன். எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அருகில் இருந்தவர்கள் என்னை பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்த போது அங்கு போலீசார் வந்தார்கள். என்னிடம் அவர்கள் விசாரணை செய்த போது நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்கு மூலம் அ.சா.ஆ.–1 அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள். ரத்தம் பட்ட என்னுடைய Duty Dress –ஐ போலீசார் கைப்பற்றி கொண்டார்கள். ரத்தம் பட்ட என்னுடைய சட்டை சா.போ.–1.

குறுக்கு விசாரணை : இல்லை.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR Date: 2023.02.01 17:53:17 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**